**O.S.No.62/2017**

வா.சா.1, திரு.மதுரப்பா
நாள் : 23.10.2025 நேரம் : 12.10 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தாவா வழக்கு எத்தனை லக்க சொத்துகளுக்கு எந்த பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2 லக்க சொத்துகளுக்கு பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா 1,2வது லக்க சொத்துகளின் அளவுகள் எனக்கு தெரியுமா என்றால் நான் கிரையம் பெற்றுள்ளேன், அளவுகள் எனக்கு தெரியாது. 18.03.1997ம் தேதி தானியேல் மகன் மார்ட்டின் என்பவரிடம் சர்வே எண். 296/6ஐ கிரையம் பெற்றுள்ளதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், மேற்படி மொத்த சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாதை மற்றும் வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்பை நீக்குவதற்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2)தானியேல் மகன் மார்ட்டின் என்பவரிடம் நான் எவ்வளவு அளவுள்ள சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் அளவு தெரியாது, மார்ட்டின் அவரது பங்காளிகளின் மொத்த சொத்தில் 3ல் 1 பங்கை கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற சொத்தின் அளவுகள் எனக்கு தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மார்ட்டின் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தில் தான் தாவா சொத்துகள் அடங்கியுள்ளதா என்றால் தாவா சொத்துகள் எனது கிரைய சொத்தில் உட்பட்டது தான். மேற்படி விவரத்தை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3)நான் மார்ட்டின் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து முழுவதிலும் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கிரையம் பெற்ற சொத்தில் எவ்வளவு அளவில் வீடு கட்டியுள்ளேன் என்றால் கிரைய சொத்து

காலியாகத்தான் உள்ளது, எனது பூர்வீக சொத்தில் தான் வீடு கட்டியுள்ளேன். எனது பூர்வீக சொத்திற்கும், மார்ட்டின் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 அடி இருக்கும். எனது பூர்வீக சொத்திற்கும், எனது பூர்வீக சொத்திற்கு எந்த திசையில் மார்ட்டின் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது.

4)எனது வீட்டிற்கும் எனது கிரைய சொத்திற்கும் இடையே தான் சுமார் 15 அடி காலியிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 15 அடி காலியிடம் யாருக்கு பாத்தியம் என்றால் நான் வீடு கட்டியுள்ள பூர்வீக சொத்தில் அடங்கியது. மேற்படி எனது பூர்வீக சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 296/6 ஆகும். நான் மார்ட்டினிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண் வேறு என்றால் சரியல்ல, அதே சர்வே எண் தான்.

**(1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )**

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.25PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.10.23 17:05:20 +0530